# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.07.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்ஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 22935/F/2022**

திரு.மா.சசிக்குமார்,
த/பெ.மாரியப்பன்,
2/31, கணவாய்ப்பட்டி,
தூசூர் அஞ்சல்,
சேந்தமங்கலம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்-637 002. — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல்அலுவலர்,
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், --- பொது அதிகார அமைப்பு
சேந்தமங்கலம்-637 409,
நாமக்கல் மாவட்டம்.

**ஆணை**

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 14.10.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பிய மனுவில், 1) நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் வட்டம், பொம்மசமுத்திரம் அக்ரஹாரம் கிராம நத்தம் சர்வே எண்.236/28-க்கு உண்டான UDR -க்கு பின்னிட்ட வருவாய் துறை பதிவேடுகளின் கிராம நத்தம் சிட்டா அடங்கல், அ-பதிவேடு, மற்றும் புல வரைபடம் நகல்கள் தேவை" என்பன போன்ற தகவல்களை 10 இனங்களில் வழங்கக் கோரியுள்ளார்.

2. அதனைப் பெற்ற பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் (பொறுப்பு), தேர்தல் துணை வட்டாட்சியர், சேந்தமங்கலம் அவர்கள் கடித எண்.ப.மு.6321/2022, நாள் 14.11.2022 தேதியிட்ட கடிதத்தில் இனம் வாரியாக தகவல்களை மனுதாரருக்கு வழங்கியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர் / மேல்முறையீட்டாளர் 30.11.2022 தேதியிட்டு பிரிவு 19 (1)-ன்கீழ் முதல் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்து தகவல்கள் பெறப்படாததால், அதன்பின்னர், மனுதாரர் / மேல் முறையீட்டாளர் 27.12.2022 தேதியிட்டு பிரிவு 19 (3)-ன்கீழ் இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப் பெற்ற ஆணையம் SA 22935/F/2022 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 10.04.2023-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 20.03.2023 தேதியிட்ட கடிதத்தில் ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனை தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், சேந்தமங்கலம் அவர்கள், ப.மு.4607/2023, பி1, நாள் 22.09.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளார். இந்நிலையில், மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது விசாரணை மேற்கொள்ளும் பொருட்டு 03.07.2025 அன்று நடைபெறும் தமிழ்நாடு தகவல் ஆணைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் ஆகியோருக்கு ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் பொதுத் தகவல் அலுவலர் திருமதி.ஏ.கோமதி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், சேந்தமங்கலம், நாமக்கல் மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய காணொளி காட்சி விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர், சேந்தமங்கலம் அவர்கள் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து பொதுத் தகவல் அலுவலரால் கடித எண்.ப.மு.6321/2022, நாள் 14.11.2022 தேதியிட்ட கடிதத்திலும், மேல்முறையீட்டு அலுவலரால் கடித எண்.ப.மு.7321/2022/பி, நாள் 30.12.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் தான் இனம் 10-ல் கோரியுள்ள பட்டா மாற்றம் செய்யக் கோரிய மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த தகவல்களை இது நாள் வரை தனக்கு வழங்கவில்லை என்று ஆணையத்தின் முன் தெரிவித்தார். மேலும், பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணையில் கடித எண்.ப.மு.2876/2025/பி1, நாள் 02.07.2025 தேதியிட்ட கடிதத்தில் மனுதாரரின் தந்தைக்கு வழங்கப்பட்ட தற்காலிக வீட்டுமனை பட்டாவினை மனுதாரர் பெயருக்கு நிரந்தர பட்டா வழங்கும் பொருட்டு உட்பிரிவு கோப்பு தயார் செய்யும்

பணி நடைபெற்று வருகிறது என்று தெரிவித்து அவற்றின் நகலை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் மனுதாரரின் பட்டா மாற்றம் குறித்து பொதுத் தகவல் அலுவலர் 15.07.2025-க்குள் மனுதாரருக்கு பட்டா மாற்றம் செய்து தருவதாக ஆணையத்திடம் உறுதியளித்தார்.

5. மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள், இன்றைய விசாரணையின்போது இருதரப்பினராலும் எடுத்துரைக்கப்பட்ட வாதுரைகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்ததில், மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதை ஆணையம் பதிவு செய்கிறது. மேலும் மனுதாரர் இன்றைய விசாரணையில் தான் 2018-ல் பட்டா மாற்றம் செய்யக்கோரி இது நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும், எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்று தெரிவித்ததை ஆணையம் ஏற்கிறது. இந்நிலையில் ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- **மனுதாரரின் 14.10.2022 தேதியிட்ட தகவல் கோரும் மனுவில் கோரிய இனம் 10-ல் 08.02.2018 அன்று வட்டாட்சியர் சேந்தமங்கலம் அவர்களுக்கு கிராம நத்தம் சர்வே எண்.285/18 நிலம் தவறுதலாக கிராம கணக்கில் அரசு புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதை திருத்தம் செய்து தனது பெயரில் மாற்றம் செய்ய மனு செய்தது தொடர்பாக இது நாள் வரை மனுதாரருக்கு தகவல்களை வழங்காததற்காக தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(8)(b)-ன் கீழ் ரூ.25,000/-ஐ (இருபத்தைந்தாயிரம் மட்டும்) பொது அதிகார அமைப்பானது இழப்பீடாக மனுதாரருக்கு 15 தினங்களுக்குள் வழங்க ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும், மனுதாரர் இழப்பீட்டு தொகையினை பெற்றுக்கொண்டதற்கான ரசீதையும், மேலும், மனுதாரருக்கு பட்டா மாற்றம் செய்து அது குறித்த தகவல்களை ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பிவிட்டு அதுகுறித்த அறிக்கையினையும் இணைத்து பொதுத் தகவல் அலுவலர் 24.07.2025 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 22935/F/2022</u>**
பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல்அலுவலர்,
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சேந்தமங்கலம்-637 409,
நாமக்கல் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**

திரு.மா.சசிக்குமார்,
த/பெ.மாரியப்பன்,
2/31, கணவாய்ப்பட்டி,
தூசூர் அஞ்சல், சேந்தமங்கலம் வட்டம்,
நாமக்கல் மாவட்டம்-637 002.

**<u>நகல்</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
நாமக்கல் மாவட்டம்.

பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 600 035.

Copy to: File NS/PA-